பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 10 செவ்வாய்க்கிழமை 24.05.2022 கதிர் 200

### இனிது ரகசியம் அல்ல!

உள்நாட்டிலும் வெளிநாடுகளில் புலம் பெயர் மக்களாலும் அதிகம் கவனிக்கப்படும் அரசியல்வாதி கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்தான்.

அவர் கடந்த இரண்டு, மூன்று நாள்களாக நாட்டில் இல்லை. அவர் வெளிநாட்டில் ☞2

# 21 ஆவது திருத்தம் கண்துடைப்புத்தான்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி 19 ஆவது திருத்த ஏற்பாடுகள் பல 'அவுட்'டாம்

கொழும்பு, மே 24

நேற்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப் பிற்கான 21 ஆவது திருத்த வரைவு வெறும் கண்துடைப்பு ஏற்பாடுதான் என்ற சாரப்பட விசனம் தெரிவித்திருக்கின்றது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம். ☞12

## பொது பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஜகத் அல்விஸ் இராஜினாமா!



பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த மே மாதம் 09 ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் நேற்று சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னரே அவர் பதவி விலகியுள்ளார். ☞2

## அமைச்சரவை பேச்சாளர்களாக ஜனாதிபதியால் நால்வர் நியமனம்

புதியஅரசாங்கத்தின்அமைச்சரவைப் பேச்சாளர்களாக நான்கு பேரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இதன்படி அமைச்சர்களான பந்துல குணவர்தன, காஞ்சன விஜேசேகர, மனுஷநாணயக்கார மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் அமைச்சரவைப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 21ஆம் திருத்த வரைவு நேற்று அமைசரவையில் சமர்ப்பணம்!

ஜனாதிபதிஅதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்துக்கான வரைவு யோசனை நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த வரைவை முன்வைத்தார் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

'அமைச்சரவை அமைச்சர்கள் இப்போது கட்சித் தலைவர்களுக்கு முன்மொழிவுகளைப் பரிந்துரைத்துள்ளனர். இது அடுத்த வாரம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்படும்' என்று அமைச்சர் மேலும் கூறினார்.

ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தைப் பலப்படுத்திய 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்களை 20ஆவது திருத்தம் வழங்கியது. அதனை திரும்பவும் 21ஆவது திருத்தம் ரத்து செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பின் ☞12

## யாழ் மக்கள் ரொம்ப நல்லவர்கள் பிராந்திய எஸ்.எஸ்.பி. புகழாரம்!



பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களோடு ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் எந்தவிதமான வன்முறைச்சம்பவங்களிலும் ஈடுபடாதமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தி ☞2

## இலங்கைக்குக் கடத்தப்படத் தயாரான பூச்சிநாசினிகள் தமிழகத்தில் சிக்கின!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே 24

தமிழகம் நரிப்பையூர் கடற்கரை மற்றும் தூத்துக்குடி ஊடாக இலங்கைக்கு கடத்த முயன்ற விவசாய பூச்சிகொல்லி ☞2

## தமிழ்த் தேசியக் கட்சிகள், எம்.பிக்களை ஒருமித்துச் செயற்பட ரெலோ அழைப்பு!



தற்போதைய சந்தர்ப்பத்தை சரியான முறையில், சிறப்பாக ஒருமித்து நின்று கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் களையும் தயவுடன் அழைக்கின்றோம். – என்று ரேலோ அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசமைப்பில் உள்ள அதிகாரங்களை 21ஆவது திருத்தத்தின் மூலம் நிரந்தரமாக்கவும் நடைமுறைப் படுத்தவும் நாம் முயல வேண்டும் என்று ரெலோ கோரியுள்ளது.

இது தொடர்பில் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் ☞12

## பணவீக்கம் 33.8 வீதமாக உயர்ந்தது

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மூலம் கணக்கிடப்பட்ட ஏப்ரல் மாதத்துக்கான பணவீக்கம் 33.8 வீதமாக அதிகரித்துள்ளது என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம், நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைய 2022 மார்ச் மாதம் 21.5 வீதமாக இருந்த பணவீக்கம் 2022 ஏப்ரலில் 33.8 வீதமாக அதிகரித்துள்ளது. ☞2

## டி.ஐ.ஜி.தென்னக்கோனையும் இடமாற்றம் செய்யப் பணிப்பு



மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை இடமாற்றம் செய்யுமாறும் பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர், பணிப்புரை விடுத்துள்ளார். காலிமுகத் திடலில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் தேவையற்ற தலையீடுகளை தவிர்ப்பதற்காக சட்டமா அதிபர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதன் ஒரு கட்டமாகவே இந்த இட்மாற்றப் பணிப்புரை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் தரப்புகளுடன் சேர்ந்து மேற்படி காலிமுகத்திடல் தாக்குதலுக்கு இடமளிக்கும் விதத்தில் பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் செயற்பட்டார் எனக் குற்றம்சுமத்தப்படுகின்றமை தெரிந்ததே.

## சி.ஐ.டி.யின் பிரதானி இடமாற்றம் கேட்டு வாங்கிச் செல்லுகின்றார்!




குற்றப்புலனாய்வுப்பிரிவின் (சி.ஐ.டி.யின்) பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளியூ. திலகரத்ன, தன்னை அப்பதவியிலிருந்து வேறு பொறுத்தமான கடமைகள் தொடர்பில் இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளார். பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கைக்கு அமைய அவருக்கு உடனடியாக நடைமுறைக்கு வரக் கூடியதாக இடமாற்றம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜபக்ஷக்களுக்குச் சார்பானவர் திலகரத்ன எனும் கருத்துப் பரவலாக பொலிஸ் திணைக்களத்தில் உலா வரும் நிலையிலும், தான் சி.ஐ.டி. பிரதானி பதவியில் நீடிக்க ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்பதை நான் இரண்டு தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் குறிப்பிட்டுத்தான் விவரம் பலருக்கும் தெரியும். 'இலங்கை விவகாரம் தொடர்பில் மிக உயர் மட்ட சர்வதேச குழு ஒன்றுக்குக் கள நிலைமை குறித்து விளக்கம் அளிப்பதற்காக சுமந்திரன் நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாம் சென்று இருக்கிறார்' என்ற சாரப்பட என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்றுக் கனடாவிலிருந்து நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார். உரிமையுடன் பேசும் பாடசாலைக் கால நண்பர்.

“நீ என்ன விளையாடுகிறாயா? அவர் சுமந்திரன் தனது வழமையான லண்டன் கொம்புகளுடன் லண்டனில் வட்டமடித்துக் கொண்டு திரிகிறார். பேஸ்புக்கைத் திறந்து பார். அவர் ஆம்ஸ்டர்டாமில் ஏதோ வெட்டிப் பிடுங்குகின்றார் என்று எழுதினாய். மனுஷன் லண்டனிலைதான் வெட்டிப் பொழுதைப் போக்குகிறார்” - என்று தகவல் சொன்னார் அந்த நண்பர்.

“அவரது(சுமந்திரனது) தொலைபேசி வெளிநாட்டு ரோமிங்கில் இருப்பதை அறிந்த போதுதான் அவர் வெளிநாடு சென்றதே எனக்கு தெரியும். அவருடன் தொடர்பு கிட்டவில்லை. வேறு வழிகளில் கிடைத்த தகவலைத்தான் நான் தந்தேன்” - என்று கூறி எனது நண்பரைச் சமாளித்தேன்.

முக புத்தகத்தைத் திறந்து பார்த்தால் என் நண்பர் கூறிய தகவல் சரிதான். லண்டனில் தமது வழமையான நண்பர்களுடன் சுமந்திரன் நிற்கின்ற படங்கள் காணப்பட்டன.

ஆம்ஸ்டர்டாமில் என் தொடர்புகளைத் துருவினேன்.

நேற்று முன்தினமும் அதற்கு முதல் நாளும் லண்டனில் நின்ற சுமந்திரன் நேற்று ஆம்ஸ்டர்டாம் வந்துவிட்டார். அவரது நிகழ்ச்சி நிரலை அவர் மூலம் பெற்றுக் கொள்ள முயற்சித்தேன். சரி வரவில்லை.

ஆனால் இன்று ஆம்ஸ்டர்டாமில் நடைபெறும் முக்கிய நிகழ்வு ஒன்றில் இலங்கை தொடர்பான ஒரு கலந்துரையாடலில் சுமந்திரன் உரையாற்றுகிறார் என அறிந்தேன். உலகப் பிரச்சினை மையங்களை தேர்ந்தெடுத்து அவை தொடர்பாகக் கலந்தாய்வுகளை நடத்தி, அவை மூலம் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடும் ஒரு சர்வதேச அமைப்பு அங்கு உள்ளது. Dialogue Advisory Group, Amsterdam என்பது அந்த அமைப்பு. அந்த அமைப்பு இன்று இலங்கை பற்றிய விடயத்தை ஆராய்கின்றது. அதில் முக்கிய பிரமுகர்கள் பலர் பங்கு கொள்கின்றனர். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கு தொடுநரும் (ICC Prosecutor) இந்தக் கூட்டத்தில் பங்கு பற்றுகின்றார் என்றால் இந்த கலந்துரையாடலின் முக்கியத்துவத்தை நான் விவரிக்க தேவையில்லை.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் இன்றிரவே சுமந்திரன் கொழும்புக்கு விமானத்தில் திரும்புகிறார். நாளையே அவர் கொழும்பு திரும்பி விடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் கொழும்பு திரும்பியதும் ஆம்ஸ்டர்டாம் கூட்டம் பற்றிய விவரமான தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும் என நம்புகிறேன்.

*  *  *

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் பிரதம நீதியரசருக்கு கடிதம் எழுதப் போய் சிக்கலில் மாட்டிக் கொண்டார் என்று நேற்றுக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

வேறுவழியின்றித் தமது செயலாளர் பதவியை நேற்று அவர் ராஜினாமா செய்தார் என்று அறிவிக்கப்படுகின்றது.

படை அதிகாரி அனுபவத்தை சிவில் நிர்வாக சேவையில் காட்ட முயன்றால் இப்படித்தானாகும். ஜனாதிபதி கோட்டாபயவின் தொடர்வை வைத்துக்கொண்டு உயர் சிவில் நிர்வாக அதிகாரிகளின் கதிரைகளை ஆக்கிரமித்து நிற்கும் முன்னாள் படை அதிகாரிகள் தாங்களாகவே நேரத்துடன் நடையைக் கட்டுவது நல்லது. இல்லையேல் வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்து கடந்த வார இறுதியில் மூடை முடிச்சுகளைக் கட்டிய அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஜகத் அல்விஸ் போன்றோரின் கதிதான் அவர்களுக்கும் நேரும். நேரத்துடன் கௌரவமாக வெளியேறுவது அவர்களுக்கு மரியாதை தரும். அவர்கள் இப்போது அமர்ந்திருக்கும் கதிரைக்கும் கௌரவம். நாட்டு மக்களுக்கும் நல்லது. விளங்கினால் திருந்திக் கொள்வார்கள்.

– மின்னல் –

## சி.ஐ.டியின் பிரதானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விரும்பவில்லை எனக் கூறி அவர் இந்த இடமாற்ற கோரிக்கைக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதன்படி மிக விரைவில் சி.ஐ.டி.க்கு புதிய பிரதானி ஒருவர் நியமிக்கப்படலாம் என பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

திலகரத்ன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரதான பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவராவார். 2019 ஆம் ஆண்டு கோட்டாபய திலகரத்ன ஜனாதிபதியானதும் அவர், சி.ஐ.டி. பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மாற்றப்பட்டு, கடந்த ஒக்ரோபரில் பிரதிப் பொலிஸ் மா அதிபராக தரமுயர்த்தி சி.ஐ.டி. பிரதானியாக அவர் நியமிக்கப்பட்டார்.

இந் நிலையில் 'மைனா கோ கம' மற்றும் 'கோட்டா கோ கம' மீதான தாக்குதல் குறித்த விசாரணைகள் பொலிஸ் மா அதிபரால் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளியூ. திலகரத்னவிடமே கையளிக்கப்பட்டது. மஹிந்த ராஜபக்ஷ இந்த விவகாரத்தில் ஒரு சந்தேக நபராகக் கருதப்படல் வேண்டும் எனப் பரவாலன குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டு வரும் நிலையில், டப்ளியூ. திலகரத்னவின் கீழ் அவ்விசாரணைகள் நியாயமாக நடக்குமா எனவும் பல அமைப்புக்கள் சந்தேகம் எழுப்பி சட்டமா அதிபருக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் முறையிட்டிருந்தன.

இவ்வாறான பின்னணியிலேயே, தன்னை சி.ஐ.டி.யிலிருந்து வேறு பொருத்தமான கடமைகளுக்கு மாற்றுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலகரத்ன பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சி.ஐ.டி.யின் நுவரெலியாப் பிரிவுக்குப் பொறுப்பாகப் பணியாற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்க குற்றப்புலனாய்வுப் பிரிவின் (சி.ஐ.டி.யின்) புதிய பிரதானியாக நியமிக்கப்படக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

## பணவீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

2022ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்துக்கான அனைத்து பொருள்களுக்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 190.3 சதவீதமாகக் காணப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் 172.7 சதவீதமாக இருந்த சுட்டெண், 17.6 சதவீத அதிகரிப்பை காட்டுகிறது.

முன்னைய வருடங்களில் பணவீக்கம் ஒற்றை இலக்கத்திலேயே இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்குக் கடத்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)



மருந்துகள் தமிழகப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதில் நரிப்பையூர் கடலில் மிதந்து வந்து ஒரு லிட்டர் பச்சை நிற போத்தல்கள் - 70, வெள்ளை நிறத் திரவப் போத்தல்கள் (ஒரு 1லீற்றர்) - 64., அரை லீற்றர் வெள்ளைப் போத்தல் - 50 என மொத்தம் 184 போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேபோன்று தூத்துக்குடி ஊடாக கடத்த முயன்ற 640 போத்தல. விவசாய திரவ போத்தல்களை தூத்துக்குடி பொலிஸார் மீட்டுள்ளனர்.

## யாழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

யட்சகர்(எஸ்.எஸ்.பி.) உயித்.என்.பி.லியனகே தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் எவருக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்படாமல் அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

யாழ் மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றார்கள். எனவே பொலிஸ் திணைக்களம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மக்களுக்கு நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேலும் தற்போது கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை ஆரம்பித்துள்ளது. யாழில் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை தடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது பரீட்சைக் காலம் என்பதனால் யாழிலுள்ள ஆலயங்களின் திருவிழாக்களின் போது ஒலிபெருக்கி சத்தத்தினை குறைத்து போடுவதன் மூலம் இடையூறுகள் ஏற்படுவதை தவிர்க்கலாம்.

தற்போதைய பரீட்சை காலங்களில் இசை நிகழ்ச்சிகள் மற்றும் திருவிழாக்களில் ஒலி பெருக்கிகளின் பாவனைக்கு தடைவிதித்திருக்கின்றோம். நிபந்தனைகளுடன் மாத்திரமே சகலருக்கும் பொலிஸ் ஒலிபெருக்கி அனுமதியினை வழங்குகின்றோம்.

யாழில் குற்றச்செயல்கள் சில இடங்களில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். எனினும் சில சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

அவர்களும் விரைவில் கைது செய்யப்படுவார்கள். எனவே யாழில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றால் புதிய குற்றங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த முடியும். - எனவும் தெரிவித்துள்ளார்.


## பொது பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு கீழ்நிலை நீதிமன்றங்கள் தடை விதிக்க மறுக்கின்றன எனக் குறிப்பிட்டு, அது தொடர்பில் அதிருப்தி தெரிவித்து, பிரதம நீதியரசருக்கு பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற முறையில் அவர் எழுதிய கடிதம் பலத்த சர்சைகளைத் தோற்றுவித்தமை தெரிந்ததே. அந்தப் பின்புலத்திலேயே இந்த இராஜினாமா இடம்பெற்றிருக்கின்றது.



காலைக்கதிர்
Kalaikkathir



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கட்சிகளைப் பிளக்கும் கலை

ராஜபக்ஷக்கள் அதிகாரத்துக்கு வந்த காலத்தில் இருந்து – 2005 நவம்பரிலிருந்து – அரசியலை நடத்துவதற்கு ஒரே தத்துவத்தைத்தான் – பாதையைத்தான் – அவர்கள் பின்பற்றுகின்றார்கள்.

அது – கட்சிகளுடன் அல்லாமல் தனி நபர்களுடன் பேரம் பேசுவதுதான். அதன் மூலம் கட்சிகளைப் பிளந்து, தேவையான ஆள்களை – எம்.பிக்களை – தம் பக்கம் வீழ்த்துவதுதான். குதிரைப் பேர அரசியல் என்பது இதைத்தான்.

அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷவினதும், கோட்டாபய ராஜபக்ஷவினதும் அதிகாரப் பிடியை வலிமைப்படுத்துவதற்காக அரசமைப்புக்கான 18ஆவது திருத்தமும், பின்னர் 20ஆவது திருத்தமும் கொண்டு வரப்பட்ட போது இப்படித்தான் குதிரைப் பேரம் மூலம் போதிய எண்ணிக்கையான எம்.பிக்கள் வளைத்துப் போடப்பட்டனர்.

ராஜபக்ஷ சகோதரர்களில் கடைக்குட்டியான பஸில் ராஜபக்ஷ இதில் படு சமர்த்தர். சூரர். பேரம் பேசி எம்.பிக்களை வளைத்துப் போடுவதில் பழமும் தின்று கொட்டையும் போட்டவர்.

பொதுமக்களின் சீற்றம் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கிளர்ந்தமையை அடுத்து, ராஜபக்ஷ சகோதரர்களின் வால்கள் ஒட்ட நறுக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர் என்று காட்டப்பட்டது. பிரதமர், மூன்று அமைச்சர்கள், ஓர் இராஜாங்க அமைச்சர் அப்பதவிகளில் இருந்து ஒதுக்கித் தள்ளி வைக்கப்பட்டனர் என்று காட்டப்பட்டது.

ஆனாலும் இன்றும் அவர்களின் தலையீடு தோன்றாகத் துணையாய் – அரூபக் கரங்களாய் – அரசுக்குள் தொடர்கின்றது என்றே கூறப்படுகின்றது.

நாடு இத்துணை நெருக்கடியில் மூழ்கி, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளை எதிர்கொண்டு, சிக்கலில் மாட்டியிருக்கையில், அதிலிருந்து மீளும் நோக்கோடு, பல தரப்புகளையும் அரவணைத்து ஒரு தேசிய அரசு போன்ற கட்டமைப்பை ஏற்படுத்தி, நெருக்கடிகளைச் சமாளிக்கும் மார்க்கத்தை நாடுவதை விடுத்து, இதிலும் வழமையான பேரம் பேசல் கூத்தையே அரங்கேற்றுகின்றார்கள் ராஜபக்ஷக்கள்.

ராஜபக்ஷக்களின் கோமாளிக் கூட்டத்துக்குள் ஒரேயொரு எம்.பி. பதவியோடு போய், பிரதமர் பதவியைப் பெற்று இணைந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தக் கேவலம் கெட்ட – குதிரைப் பேர – அரசியல் சாக்கடைக்குள் தன்னையும் இணைத்துக் கொண்டு விட்டார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளந்து இருவரை விலைக்கு வாங்கியாயிற்று.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுத் தீர்மானத்துக்கு முரணாக இருவரை வளைத்துப் போட்டாயிற்று.

அரசுப் பக்கமே சோலிக்கு வராத முஸ்லிம் காங்கிரஸின் ஒருவரை அமைச்சராக்கி விட்டாயிற்று.

இன்னும் எத்தனை கட்சிகளை உடைத்துத் தனி எம்.பிக்களை அமைச்சர் பதவி மோகம் காட்டி வீழ்த்தப்போகின்றார்களோ ராஜபக்ஷக்கள் தெரியவில்லை.

நெருக்கடியில் இருக்கும் நாட்டை மீட்பதற்கு ஒன்றுபட்ட திட்டம் வேண்டும் என்றால், அது அரசியல் கட்சிகள் தமக்கிடையேயான அரசியல் கொள்கைக் கோட்பாடுகள், திட்டங்களை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு ஒன்றுபடுத்தல்தான். அரசியல் கட்சிகளைப் பிளந்து, ஆள் பிடிப்பதன் மூலம் வருவதல்ல அந்த ஒற்றுமை. மாறாக அத்தகைய போக்கு ஒன்றுபட்ட நன்முயற்சிகளைப் பிளக்கும் வேலை. அது முடிவில் பயன் தராது. வீழ்ச்சியைத்தான் தரும்.

## ரணிலால் ஒரு மாத காலத்துக்குக் கூட ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது!

### ராஜித சேனாரத்ன ஆரூடம்



இரகசிய ஒப்பந்தம் மூலம் இடைக்கால அரசாங்கத்தை அமைத்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் ஒரு மாத காலத்துக்குக் கூட ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது. பிரதி சபாநாயகர் விவகாரத்திலேயே உண்மையான ரணில் விக்கிரமசிங்கவின் சுயரூபம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரகசிய ஒப்பந்தத்தின் ஊடாகவே இடைக்கால அரசாங்கத்தை அமைத்துள்ளார். அவர் ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக அன்றி நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒருபோதும் செயற்பட மாட்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தில் கட்சிசாரா அரசாங்கத்தில் பங்கேற்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசாங்கம் எவ்வாறு கட்சி சாராததாக அமையும்?

அவ்வாறெனில் சகல துறைசார் நிபுணர்கள் அழைக்கப்பட்டு அவர்களை உள்ளடக்கிய ஆட்சியொன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஏனைய கட்சிகளிலுள்ள உறுப்பினர்களை இரகசியமாக அழைத்து திருட்டு அரசாங்கத்தையே அமைத்துள்ளார். அதன் காரணமாகவே அவருக்கு முன்னோக்கிச் செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் இதுவரையில் ஒரு டொலரைக் கூட பெற்றுக் கொள்ளவில்லை.

பிரதி சபாநாயகர் விவகாரத்தில் அவர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ரோஹிணி கவிரத்னவை நாம் வேட்பாளராக நியமித்தோம். இறுதி நாள் வரை அவரை ஏகமனதாகத் தெரிவு செய்யும் தீர்மானமே காணப்பட்டது. எவ்வாறிருப்பினும் அன்றைய தினம் பஸில் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவினரை அழைத்து அஜித் ராஜபக்ஷவை வேட்பாளராக்கி ரணிலின் கோரிக்கைக்கு முற்றுபுள்ளிவைத்து, அவரின் கொள்கையையும் கேள்விக்குறியாக்கினார்.

பெண் பிரதிநிதியை வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்று யோசனை முன்வைத்த ரணிலே அதற்கு முரணாக செயற்பட்டார். இதிலிருந்தே அவரது சுயரூபம் வெளிப்படுத்தப்பட்டது. 19 ஆவது திருத்தம் மீள நடைமுறைப்படுத்தப்பட்டால் இரட்டை பிரஜாவுரிமையுடையோரது நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்தாகும்.

எனவே பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்ற உறுப்புரிமையும் தானாகவே நீங்கும். ஆனால் அவர் அதற்கு இடமளிக்கமாட்டார். இந்த விடயத்தில் ரணிலின் நகர்வு எவ்வாறு அமையப்போகிறது? இவ்வாறான கொள்கை மாறுபாட்டுடன் இந்த இடைக்கால அரசாங்கத்தால் இன்னும் ஒரு மாதம் கூட ஆட்சி செய்ய முடியாது. பின் வாசல் வழியாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க, அதே பின்வாசல் வழியாகவே பிரதமராகவும் ஆகியுள்ளார். இவரால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. – என்றார்.

## 21 ஐ நிறைவேற்ற ராஜபக்ஷ குடும்பம் பெரமுனவூடாக குழப்பம் ஏற்படுத்தும்

### மயந்த திஸாநாயக்க கூறுகிறார்



21 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். எவ்வாறிருப்பினும் இரட்டை குடியுரிமை விவகாரத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினர் பொதுஜன பெரமுனவிருக்கு அழுத்தத்தை பிரயோகித்து இந்த விடயத்தில் ஏதேனுமொரு குழப்பத்தை ஏற்படுத்துவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

புதிதாக நியமனம் பெற்றுள்ள நீதித்துறை அமைச்சர் 21 ஆவது அரசமைப்பு திருத்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இது வரவேற்கக் கூடிய விடயமாகும். இதில் இரட்டை பிரஜாவுரிமையுடையோர் தொடர்பான உள்ளடக்கமும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவிற்கே பெரும்பான்மை காணப்படுகிறது. பொதுஜன பெரமுனவை இப்போதும் ராஜபக்ஷ குடும்பமே நிர்வகித்துக் கொண்டிருக்கிறது. எனவே இரட்டை பிரஜாவுரிமை விவகாரத்தில் ராஜபக்ஷ குடும்பத்தினரால் பொதுஜன பெரமுனவினருக்கு அமைவான முறையில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதில் ராஜபக்ஷ குடும்பம் ஏதேனுமொரு குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கும். நாடு தற்போதுள்ள நிலைமையில் அரசியலை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு , அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தில் இணையுமாறு எனக்கும் தொடர்ச்சியாக அழைப்பு விடுக்கப்பட்டு வருகிறது. எவ்வாறிருப்பினும் ஐக்கிய மக்கள் சக்தியின் தீர்மானத்துக்கு அமையவே நான் செயற்படுவேன். எனினும் கட்சி மற்றும் கட்சி அரசியலை விட நாடு முக்கிய என்ற கொள்கையின் அடிப்படையில் நாட்டுக்காக எடுக்கப்படும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். – என்றார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ‘மைனா கோ கம’, ‘கோட்டா கோ கம’ தாக்குதல்; ஆலோசனைகளை தென்னகோன் பின்பற்றவில்லை!



## பொலிஸ் மா அதிபர் பகிரங்க குற்றச்சாட்டு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்கத்தை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த ‘மைனா கோ கம’, ‘கோட்டா கோ கம’ அமைதிப் போராட்டக்காரர்களின் பாதுகாப்பு தொடர்பாகத் தான் வழங்கிய எழுத்து மூல, வாய் மொழி மூல ஆலோசனைகளை, பொறுப்பான உயர் அதிகாரியாகச் செயற்பட்ட மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பின்பற்றாதிருந்துள்ளார் எனப் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவிடம் சி.ஐ.டியினர் 5 மணி நேரம் வரை விசாரணை நடத்தி வாக்குமூலம் பெற்றனர்.

இதன்போதே பொலிஸ் மா அதிபர் இந்த விடயங்களை வெளிப்படுத்தினார் என சி.ஐ.டியின் உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை முன்னெடுக்க வேண்டாம் எனதான் ஒருபோதும் ஆலோசனை வழங்கவில்லை எனவும் இதன்போது பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார் என அந்தத் தகவல்கள் கூறின.

இந்த நிலையில், மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், ஜனாதிபதியிடமும், பொலிஸ் மா அதிபரிடமும் வெவ்வேறு விதமாக தகவல்களை கூறி அவர்களை தவறாக வழி நடாத்தியுள்ளாரா என சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் சி.ஐ.டியினரால் கடந்த 17 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது, அவர் வழங்கிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை மையப்படுத்தி பொலிஸ் மா அதிபரிடமும் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர மற்றும் பொலிஸ் விசேட நடவடிக்கை பணியகத்தின் (உளவுத் தகவல்கள் தொடர்பாக) பிரதானி பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி.சி.ஏ. தனபால ஆகியோரிடமும் சி.ஐ.டி. விசாரணை செய்தது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் சி.ஐ.டிக்கு வழங்கினார் எனக் கூறப்படும் வாக்குமூலத்தில், பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமையவே, கோட்டா கோ கம மீது தாக்குதல் நடத்த வந்தவர்களைத் தடுக்காமல் இருந்தோம் என குறிப்பிட்டுள்ளார் என அறிய முடிகிறது.

இந்நிலையில், சனிக்கிழமை பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன அளித்துள்ள வாக்குமூலத்தில், மைனா கோ கம, கோட்டா கோ கம மீது, அலரிமாளிகைக்கு வருவோர் அத்துமீறலாம் என்பது தொடர்பிலும் வன்முறைகள் ஏற்படலாம் என்பது குறித்தும் மே 8 ஆம் திகதி உளவுத் தகவல் கிடைத்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த தகவல்கள் பிரகாரம், அலரி மாளிகைக்கு வருவோரை எந்தக் காரணத்துக்காகவும் அலரி மாளிகையின் முன்பக்கமாக அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் பக்கமோ அல்லது காலிமுகத்திடல் பக்கமோ செல்வதை அனுமதிக்க வேண்டாம் எனவும், அதற்கு மேலதிகமாக அரசாங்க எதிர்ப்புக்களுடன் காணப்படும் மக்கள் இருக்கும் பகுதிகளுக்கு செல்வதையும் அனுமதிக்க வேண்டாம் எனவும் எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தேன் என பொலிஸ் மா அதிபர் சி.ஐ.டியிடம் தெரிவித்துள்ளார்.

காலி முகத்திடல் நோக்கி பயணிக்க முடியுமான அனைத்து பாதைகளையும் வீதித் தடைகள் கொண்டு மூடி பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும் அந்த ஆலோசனைகளில் கூறியிருந்தேன். அவற்றை மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் முன்னெடுத்திருக்கவில்லை.

குறைந்த பட்சம், அரசாங்க ஆதரவாளர்களின் பேரணியைத் தடுக்க நீதிமன்ற உத்தரவொன்றைக் கூட அவர் பெற முயன்றிருக்கவில்லை. என பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன சி.ஐ.டி. வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என அறியமுடிகிறது.

மாற்றமாக மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சில அரசியல் வாதிகளுடன் தொடர்புபட்டு, அவர்களின் தேவைக்கு அமைய செயற்பட்டுள்ளார் என சிற்சில தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என சி.ஐ.டி. தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.ஐ.டியினர் பொலிஸ் விசேட நடவடிக்கை பணியக பிரதானியிடம் செய்த விசாரணைகளில், 9 ஆம் திகதி இடம்பெற முடியுமான வன்முறைகள் தொடர்பில் விரிவான தகவல்களை வழங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 8 ஆம் திகதி கொழும்பு பொலிஸ் பிரதானிகளுடன் இடம்பெற்ற சூம் கலந்துரையாடலில், ஜனாதிபதி செயலக பாதுகாப்பு மற்றும் காலி முகத்திடல் பகுதி பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சம்பிக்க சிறிவர்தன (தற்போது கேகாலைக்கு மாற்றம்), பாதுகாப்பை பலப்படுத்தவும், கண்ணீர் புகைப் பிரயோகம், நீர்த்தாரை பிரயோகம் தொடர்பில் முன்வைத்த முன்மொழிவுகளை, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து கண்டித்தமை தொடர்பிலும் சி.ஐ.டி. விசாரணைகளில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பஸிலைப் பாதுகாப்பதை விடுத்து பெரமுனவினர் மக்கள் நிலைப்பாட்டுக்கமைய செயற்படவேண்டும்!



## வாசு கோரிக்கை

அரசமைப்பு திருத்தம் தொடர்பாக நாட்டு மக்கள் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். 20 ஆவது திருத்தம் முழுமையாக ரத்து செய்யப்படாவிடின் சமூக கட்டமைப்பில் மீண்டும் பாரியதொரு நெருக்கடி நிலைமை தோற்றம் பெறும்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவை பாதுகாக்கும் நோக்கத்தை விடுத்து தம்மைத் தெரிவு செய்த மக்களின் நிலைப்பாட்டுக்கமைய செயற்பட வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி தீவிரமடைவதற்கு முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும்.

அரசாங்கம் கொள்கைக்கு முரணாக செயற்பட்ட காரணத்தால் அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் நாட்டு மக்கள் அரசமைப்பு திருத்தம் தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நிற்கும் மக்கள் ‘அமெரிக்க பிரஜை இலங்கை பிரஜைகளை வீதியில் தள்ளியுள்ளார்’ எனக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

இரட்டை குடியுரிமையுடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்த அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் அனுமதி வழங்கப்பட்டது. இரட்டை குடியுரிமை விவகாரத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்.

புதிய அரசமைப்பு ஊடாக இரட்டை குடியுரிமை விவகாரத்துக்கு சாதகமான தீர்வு எட்டப்படும் என ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியைத் தொடர்ந்து 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினோம். புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றவில்லை.

இரட்டை குடியுரிமையுடையவர் அரசியலில் செல்வாக்கு செலுத்துவது முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் என நாட்டு மக்கள் வலியுறுத்துகிறார்கள்.

சாதாரண மக்களும் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே மக்களை ஏமாற்றும் வகையில் அரசியல் சூழ்ச்சிகளை முன்னெடுக்க முடியாது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்திற்கு முழுமையாக ஆதரவு வழங்க வேண்டும்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை பாதுகாக்கும் வகையில் செயற்ப டுவதை விடுத்து தம்மை தெரிவு செய்த மக்களின் நிலைப்பாட்டுக்கமைய பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் செயற்பட வேண்டும். – என்றார்.

# மின்கட்டணத்தை அதிகரிக்காவிடில் பெரும் நட்டம் எதிர்கொள்ளநேரிடும்

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு



மின்னுற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ள பின்னணியில் மின்கட்டணத்தை குறைந்தபட்சமேனும் அதிகரிக்காவிடின் 250 பில்லியன் ரூபா நட்டத்தை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும். மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடம் கருத்து கணிப்பு கோரப்படும் என இலங்கை பொதுப் பயன்பாட்டுஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

டொலர் பற்றாக்குறை காரணமாகவே எரிபொருள் கொள்வனவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மின்னுற்பத்திக்குத் தேவையான எரிபொருளை தடையின்றி விநியோகிக்க இலங்கை மின்சார சபை உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து மின்விநியோக தடை 3 மணித்தியாலங்கள் அளவு மட்டுப்படுத்தப்பட்டது.

கடந்த காலத்தைக் காட்டிலும் மின்னுற்பத்திக்கான கேள்வி அதிகரித்துள்ளது. மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பான யோசனையை அரசாங்கம் கொள்கை அடிப்படையில் முன்னெடுக்க வேண்டும்.

2014ஆம் ஆண்டு காலத்துக்குப் பிறகு மின்கட்டணமும் அதிகரிக்கப்படவில்லை, தேசிய மின்னுற்பத்தி கட்டமைப்பிற்கு புதிதாக மின்நிலையங்களும் இணைத்துக்கொள்ளப்படாத காரணத்தால் மின்னுற்பத்தி மற் றும் மின்விநியோக கட்டமைப்பு பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளது.

மின்னுற்பத்திக்கான கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலைமையில் மின்கட்டணத்தைக் குறைந்தப்பட்சமேனும் அதிகரிக்காவிடின் 250 பில்லியன் நட்டத்தை அரசாங்கம் எதிர்கொள்ள நேரிடும்.

ஆகவே, மின்கட்டண அதிகரிப்பு தொடர்பாக அரசாங்கம் கொள்கை ரீதியிலான தீர்மானத்தை விரைவில் முன்னெடுக்க வேண்டும்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையை நள்ளிரவில் அதிகரிப்பதை போன்று மின்கட்டணத்தை நள்ளிரவில் அதிகரிக்க முடியாது. மின்கட்டண அதிகரிப்பு தொடர்பாகப் பொது பயன்பாட்டு ஆணைக்குழு முறையான பரிந்துரைகளை முன்னெடுக்கும். மின்கட்டண அதிகரிப்பு தொடர்பாகப் பொது மக்களிடம் கருத்து கணிப்பு கோரப்படும். – என்றார்.

# இலங்கையை மேற்கோள்காட்டி டுவிட்டரில் பதிவிட்ட மலேசிய நாட்டின் அரசியல்வாதி

## விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸார்

மலேசியாவை இன்னொரு இலங்கையாக மாற்ற வேண்டாம் என்று எச்சரித்தமைக்காக சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கிறேன் என மலேசிய ஜனநாயக செயல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லிம் கிட் சியாங் தெரிவித்துள்ளார்.

தான் எவரையும், எந்த வகுப்பையும் அல்லது நபர்களின் சமூகத்தையும் தூண்ட விரும்பவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

மற்றொரு நபரை எரிச்சலூட்டும், துஷ்பிரயோகம் செய்யும், அச்சுறுத்தும் அல்லது துன்புறுத்தும் நோக்கத்துடன் ஆபாசமான, அநாகரிகமான, பொய்யான, அச்சுறுத்தும் அல்லது புண்படுத்தும் தன்மை கொண்ட எந்தவொரு தூண்டுதலை நான் உருவாக்கவில்லை அல்லது ஆரம்பிக்கவில்லை.

எனினும் மலேசியர்களை எச்சரித்தமைக்காக நான் சிறைக்குச் செல்ல தயாராக இருக்கிறேன். மலேசியா மற்றுமொரு இலங்கையாக மாறக் கூடாது எனவும் லிம் கிட் சியாங் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் விளைவிக்கும் கருத்தைக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் லிம் கிட் சியாங்கின் டுவிட் தொடர்பாக மலேசிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் லிம் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

'கடந்த வாரம் இலங்கையில் நடந்தது போல் மலேசியாவின் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் வீடுகள் கோபமடைந்த போராட்டக்காரர்களால் தீவைக்கப்படுமா?' என லிம் டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டிருந்தார்.

இது தொடர்பாகவே மலேசிய பொலிஸார் அவருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

லிம் கிட் சியாங்கின் டுவிட்டர் பதிவு கடந்த வியாழன் முதல் வட்ஸ்அப்பில்வைரலாக பகிரப்பட்டுவருவதாக கோலாலம்பூர் புக்கிட் அமான் பொலிஸ் தலைமையகத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் டத்தோஸ்ரீ அப்துல் ஜலீல் ஹாசன் தெரிவித்துள்ளார்.

மலேசியாவிலும் பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன எனவும் இதன் காரணமாக அந்நாட்டிலும் மக்கள் பெரும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது. கொவிட் 19 தொற்று நோய் பரவல் மற்றும் அரசியல்வாதிகளின் ஊழல்கள் காரணமாக மலேசியாவில் இந்த நிலைமை உருவாகி இருப்பதாக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

# கப்ராலின் பயணத் தடை ஜூலை 25 இற்கு நீடிப்பு!




மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலின் பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 25 ஆம் திகதி வரை அவரது பயணத்தடையை நீடித்து கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதிவான் ஹர்ஷன கெகுனாவெல இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

பல நிதி மோசடிகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மனுவை முன்னாள் ஆளுநர் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்துள்ளார்.

# ஈழத்து இலக்கிய உலகின் தூண் ஒன்று சரிந்தது...!



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரும் ஓய்வுபெற்ற ஆசிரியரும், வடமராட்சியின் புகழ்பூத்த தேவரையாளி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும், வல்வைக் கல்வி மன்றத்தின் முன்னாள் ஆசிரியருமான 'தெணியான்' என்று அழைக்கப்படும் வடமராட்சி பொலிகண்டி, தெணி என்ற இடத்தைச் சேர்ந்த எங்கள் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய கந்தையா நடேசன் 21.05.2022 அன்று தனது 84 ஆவது வயதில் காலமானார் என்ற அந்தத் துன்பியல் செய்தி ஈழத்து எழுத்தாளர்கள் மற்றும் கல்வித் துறைசார்ந்தவர்களிடையே மிகுந்த அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

1964 இல் 'விவேகி' சிற்றிதழில் வெளிவந்த 'பிணைப்பு' எனும் சிறுகதையுடன் இவரது எழுத்துலகப் பிரவேசம் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து 400 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளை ஈழத்தின் பிரபலமான சஞ்சிகையான மல்லிகை, ஜீவநதி போன்றவற்றிலும், தமிழகத்தின் சிற்றிதழ்களிலும், வீரகேசரி, ஈழநாடு தினகரன், தினக்குரல் போன்ற தேசிய நாளிதழ்களிலும் வெளியிட்டு ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துள்ளார். சிறப்பாக சுமார் 150 இற்கும் மேற்பட்ட சிறுகதைகள், 30 வரையான கவிதைகள், 8 நாவல்கள், 3 குறுநாவல்கள், 5 வானொலி நாடகங்கள், 100 இற்கும் மேற்பட்ட கட்டுரைகள், விமர்சனங்கள், செவ்விகள் என்பன இவரது படைப்பிலக்கியத்தின் உன்னதமான அறுவடைகளாக உள்ளன.

தமிழ் இலக்கியத் துறையில் அவரது சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் கலாசார அலுவல்கள் அமைச்சால் கலாபூஷணம், சாகித்திய இரத்தினா போன்ற பல்வேறு விருதுகளையும், அவரது நூல்கள் பலவற்றுக்கு சிறந்த நூல்களுக்காக வழங்கப்படும் 'சாகித்திய விருது' என்ற உயர் விருதுகளைப் பல தடவைகள் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சமூகத்தில் நலிவடைந்து பல்வேறு துன்பங்களைத் தாங்கி வாழும் மக்களுக்காகவே இவரது பேனா முனை திரும்பியிருந்தது. சாதிய ஒடுக்குமுறைகள் மற்றும் வர்க்க முரண்பாடுகளுக்குள்ளாகித் திசை தெரியாது தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு சமூகத்தின் குரலாக ஒலித்து, அவர்களுக்கான ஒரு நம்பிக்கை ஒளியாகத் திகழ்ந்த தெணியானின் எழுத்துக்கள் கூர் ஆயுதங்களாக பிறபோக்கு வாதிகளைத் தாக்கியதால், அவரது எழுத்தைக் கண்டு அஞ்சியவர்கள் அவரின் முன்னால் வாயே திறக்கமுடியாது இருந்தமையைப் பார்த்திருக்கின்றோம். முற்போக்கு எழுத்தாளர்களின் வரிசையில் டானியல், தங்கவடிவேல் மாஸ்ரர், பேராசிரியர் கா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா போன்ற சமூகப் போராளிகளின் வரிசையில் இன்று அண்ணன் தெணியானும் எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்.

ஈழத்தின் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன் புதிதாக எழுத வருபவர்களுக்கும் வழிகாட்டி அவர்களுக்கான சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகளை எங்களுடன் இணைந்து நடத்தி அவர்களை இந்த மண்ணில் எழுத்தாளர்கள் ஆக்கிய பெருமைக்குரிய தெணியான் எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், பண்பாகவும், அன்பாகவும் பழகக்கூடிய ஓர் உன்னதமான மனிதராகவே வாழ்ந்தார்.

வடமராட்சியின் பொலிகண்டி கிராமத்தின் 'தெணி' என்னும் பகுதியில் சந்ததி சந்ததியாகப் பல காலம் வாழ்ந்துவந்த இவரது குடும்பத்தவர்களை, பொலிகண்டிக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் 'தெணியார்' என அழைக்கும் வழக்கம் இருந்தமையால், நடேசன் மாஸ்ரர், 'தெணியான்' என்ற புனைப்பெயரையே தனக்கும் சூட்டிக் கொண்டு , தனக்கும் தான் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர் இன்று எங்களை விட்டு மறைந்தாலும் சமூகத்தை நேசிக்கும் அவரது ஆழமான எழுத்துக்கள் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

தெணியானின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது அன்புக்குரிய குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள், இலக்கியத் துறையைச் சேர்ந்த ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், கல்வித் துறைசார்ந்தவர்கள் அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இலக்கிய உலகில் சாதனைகள் படைத்த அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**- வல்வை ந.அனந்தராஜ் -**

# தியாக தீபம் திலீபனின் நினைவிடம் துப்புரவாக்கல்



யாழ்ப்பாணம் நல்லூரடியில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் துப்புரவு செய்யப்பட்டது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர்.

# நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்தமும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும்!



மட்டக்களப்பில் வைத்து கடந்த 2004 ஆண்டு சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்த தினம் எதிர்வரும் 31.05.2022 திகதி நினைவு கூரப்படவுள்ள நிலையில், அதனை முன்னிட்டு ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18 ஆவது ஞாபகார்த்த நிகழ்வும் 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் எதிர்வரும் 29.05.2022 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ. தேவஅதிரன் தலைமையில் மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் 29 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் போது படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து, நினைவுச் சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றிய உபதலைவர் க.ஜெகதீஸ்வரனும், தலைமையுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான, இ.பாக்கியராஜா நிகழ்த்தவுள்ளதுடன், நூல் வெளியீட்டுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவஅதிரன் நிகழ்த்தவுள்ளார்.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஏ.எல்.எம்.சலீமால் நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதுடன், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான அ.நிக்சன் மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான இரா.துரைரெத்தினம் ஆகிய இருவராலும் ஊடகர் ஜீ.நடேசன் தொடர்பான சிறப்பு நினைவுப்பகிர்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூலில் நடேசனின் நண்பர்கள், பத்திரிகையாளர்கள், நெருக்கமானவர்கள் எனப் பலரும் தமது நினைவுகளைப் பகிர்ந்துள்ளனர். கடந்த 2021ஆம் ஆண்டு 17ஆவது ஞாபகார்த்த தினத்தில் வெளியிடவென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் கொவிட் சூழல் காரணமாக குறித்த நூல் வெளியீடானது பிற்போடப்பட்ட நிலையில் இவ்வருடம் வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்விற்கு அனைத்து ஊடகவியலாளர்களையும், சமூக நலன் விரும்பிகள், மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களையும் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் அழைப்புவிடுத்துள்ளார்.

# ஈழத்து இலக்கிய குடும்பத்தின் மூத்த சகோதரன் தெணியான் விடைபெற்றார்

- முருகபூபதி -



தெணியான் - பவளவிழாவில்

கந்தையா நடேசன் என்ற இயற்பெயர்கொண்டவரும், இலக்கிய ஊடகத்துறைகளில் தெணியான் என அழைக்கப்பட்டவருமான ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமை நேற்று முன்தினம் 22 ஆம் திகதி தமது 80 ஆவது வயதில் வடமராட்சி கரவெட்டி கரணவாய் இல்லத்தில் மறைந்தார்.

06-01-1942 ஆம் திகதி வடமராட்சி பொலிகண்டியில் கந்தையா – சின்னம்மா தம்பதியருக்கு பிறந்த நடேசன், இலக்கிய உலகில் பிரவேசித்ததும் 'தெணியான்' என்ற பெயரில் எழுதத்தொடங்கி, அதுவே நிலைத்துவிட்டது.

தான் கல்வி கற்ற கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியிலேயே நீண்டகாலம் ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் மற்றும் ஒரு மூத்த எழுத்தாளர் கே. டானியலின் வாரிசு எனவும் அவர் வர்ணிக்கப்பட்டவர்.

நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும் பல நாவல்களும் சில விமர்சனக் கட்டுரைத் தொகுதிகளையும் தமிழ் இலக்கியத்திற்கு வரவாக்கியிருக்கும் தெணியானின் பாதுகாப்பு என்ற சிறுகதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதியில் வெளிவந்தது.



எழுத்தாளர் தெணியான்

இச்சிறுகதை தற்போது இலங்கைப்பாடசாலைகளில் 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான தமிழ் பாட நூலிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து முன்னர் வெளியான விவேகி இதழில் 1964 இல் தெணியானின் முதல் சிறுகதை பிணைப்பு வெளியாகியது. அதனைத் தொடர்ந்து, மல்லிகை, ஞானம், யாழ். முரசொலி, வீரகேசரி, தினக்குரல் உட்பட பல இதழ்களில் அயராமல் எழுதியிருப்பவர்.




தெணியானின் படைப்புகள் மீதான பார்வை


இவருடைய கழுகுகள் (நாவல்),சொத்து (சிறுகதைத்தொகுதி), குடிமைகள்(நாவல்) என்பன தமிழ் நாட்டில் பிரபல பிரசுர நிறுவனங்களான நர்மதா பதிப்பகம், என்.சி.பி.எச். மற்றும் கறுப்பு பிரதிகள் முதலானவற்றின் ஊடாக தமிழக வாசகர்களையும் சென்றடைந்துள்ளன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இயங்கிய காலத்தில் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகவும் இயங்கியிருக்கும் தெணியான், தமது படைப்புகளுக்காக இலங்கை தேசிய சாகித்திய விருது, வடகிழக்கு மகாண அமைச்சுப் பரிசு, யாழ். இலக்கிய வட்டத்தின் பரிசு, இலங்கை தேசிய கலை இலக்கியப்பேரவை – தமிழ்நாடு சுபமங்களா இதழ் ஆகியன இணைந்து வழங்கிய பரிசு, மற்றும் தமிழ்நாடு கு.சின்னப்பபாரதி அறக்கட்டளை விருது, கொடகே விருது, கலாபூஷணம் விருது, இலங்கை அரசின் உயர் விருதான சாகித்திய ரத்னா விருதும் பெற்றிருப்பவர்.




இலங்கை வானொலிக்காக முன்னர் பல நாடகங்களும் எழுதியிருக்கும் தெணியான், பேராசிரியர் க. சிவத்தம்பி, மல்லிகை ஜீவா ஆகியோர் பற்றியும் விரிவான நூல்களை வரவாக்கியிருப்பவர்.








தெணியான் 2011 மகாநாட்டில்

தான் கற்ற, ஆசிரியப்பணியாற்றிய தேவரையாளி இந்துக்கல்லூரியின் இரண்டு வெளியீடுகள் மற்றும், மல்லிகை ஜீவாவின் ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக்குரல் நூலினதும் தொகுப்பாசிரியருமாவார்.

கனடாவில்வதியும்தெணியானின் தம்பி நடத்திய நான்காவது பரிமாணம் இதழின் சார்பில் வெளியான மரக்கொக்கு நாவல் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

1964 முதல் அரைநூற்றாண்டுக்கும் மேலாக அயராமல் இலக்கியப் பிரதிகளை எழுதிவந்திருக்கும் தெணியானுக்கு கடந்த 2003 ஆம் ஆண்டில் நடந்த மணிவிழாக் காலத்தில்,பல இலக்கிய ஆளுமைகள் இவர் பற்றி எழுதியிருக்கும் மணிவிழா சிறப்பு நூலை எழுத்தாளர் கொற்றை கிருஷ்ணானந்தன் தொகுத்திருக்கிறார்.

தெணியானின் பல்துறை இலக்கிய ஆற்றல்களை மதிப்பீடு செய்யும் தெணியானின் படைப்புகள் மீதான பார்வை, தெணியானின் ஜீவநதிச்சிறுகதைகள் ஆகியனவற்றையும் யாழ். ஜீவநதி கடந்த 2013 இல் இவரது பிறந்த தினத்திலேயே விழா எடுத்து வெளியிட்டமை குறிப்பிடத் தகுந்தது.

இலங்கையில் மல்லிகை, ஞானம், கனடா காலம் முதலான கலை, இலக்கிய இதழ்கள் தெணியானை அட்டைப்பட அதிதியாகவும் பாராட்டி கௌரவித்துள்ளன.



ஸ்ரீபதி - முருகபூபதி - தெணியன்

வடபுலத்தின் அடிநிலை மக்களின் விடுதலைக்காகவும் பொற்சிறையில் வாடும் புனிதர்களுக்காகவும் குரல்கொடுத்தவர் அவர்.

பல பசுமையான நினைவுகளைத் தந்துவிட்டு விடைபெற்றுள்ள எமது இலக்கியச் சகோதரன் தெணியானுக்கு சிரம்தாழ்ந்த அஞ்சலி.




## இரா.துரைரட்ணசிங்கத்தின் முதலாம் ஆண்டு நினைவுகள்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.துரைரட்ணசிங்கத்தின் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் குடும்பத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

துரைரட்ணசிங்கம் ஆசிரியராக, அதிபராக, உதவிக்கல்விப்பணிப்பாளராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியதுடன் மூன்று தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

இந் நினைவஞ்சலி நிகழ்வில் திருகோணேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குரு முத்துசாமிக்குருக்கள், காளி கோவில் பிரதம குரு இரவிச்சந்திரக் குருக்கள், திருகோணமலை பேராயர் இம்மானுவேல் ஆண்டகை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறீதரன், த.கலையரசன,; முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான

சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், சி சிறீநேசன், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர்கள் தண்டாயுதபாணி, துரைராசசிங்கம் உள்ளிட்டோரும் பிரதேச செயலாளர்கள் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உறவினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வீட்டிலிருந்து வெளியேற்றமாம்!

## நீதிமன்ற உத்தரவே காரணமாம்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த வாரம், கொழும்பு பேஜெட் வீதி இல்லத்தை விட்டு வெளியேறி கொழும்பு 7 இல் உள்ள அரச இல்லத்தில் குடியேறியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவுக்கு அமைய அவர் குறித்த வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கொழும்பு பேஜெட் வீதியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை தொடர்ந்து பயன்படுத்துவதற்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்யசோதி சரவணமுத்து ,இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவின் விசாரணையின்போது, நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம், 2019 ஒக்டோபரில் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை இடைநிறுத்தி இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்தது.

இதன்படியே மைத்திரி வீட்டில் இருந்து வெளியேறியுள்ளார்.

# திருக்குறள்வழியில் நூதன திருமணம் மலையகத்தில்!

மலையகத்தில் திருக்குறள் வழியில் நூதன திருமண நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

ஹற்றன் – காசல்ரீ பகுதியில் இந்த நூதன திருமண நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது.

மணமகன் கையில் திருக்குறள் நூலை தாங்கியும், மணமகள் திருவள்ளுவர் சிலையை தாங்கியும் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

சிறுவர்கள் திருக்குறள்கள் எழுதப்பட்ட சிறு பதாகைகளை தாங்கி, புதுமணத் தம்பதியினரை வரவேற்றனர்.

வழமையான திருமண சடங்குகள் நிறைவுற்றதன் பின்னர், இந்த திருக்குறள் வழி திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது.

செல்வன் த.திருச்செந்தூரன் மற்றும் செல்வி கு.தர்ஷினி தம்பதியினர் இவ்வாறு திருக்குறள் வழி திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் திருக்குறட்பாக்கள் ஓதப்பட்டன, தம்பதியினர் திருக்குறள் வழியில் திருமண பந்தத்தில் இணைவது குறித்த உறுதிமொழிகளை மேற்கொண்டனர்.



மலையக கல்வியியலாளர்கள், கவிஞர்கள் உள்ளிட்ட பலரும் இந்த தம்பதியினருக்கு தங்களது வாழ்த்துக்களைத் நேரில் தெரிவித்திருந்தமை சிறப்பம்சமாகும்.

மேற்கத்தைய நவீன கலாசார நெறி மரபுகளை பின்பற்றி திருமண நிகழ்வுகள் நடந்தேறும் இந்தக் காலப் பகுதியில் திருக்குறள் வழியில் மலையகப் பகுதியில் திருமண நிகழ்வு நடைபெற்றமை அனைவரினாலும் பாராட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் கிடைக்காதமையினால் 2 நாளான சிசுவின் உயிர் பறிபோனது

எரிபொருள் கிடைக்காத காரணத்தால் வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக பிறந்து இரண்டு நாள்களே ஆன ஆண் சிசு உயிரிழந்த பரிதாபகரமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதனை தியத்தலாவை மரண விசாரணை அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது. ஹல்தும்முல்ல சொரகுனே ரதகந்துர என்ற இடத்திலேயே இந்த பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி பிறந்த குறித்த சிசுவும் தாயும் சிறந்த நலத்துடன் இருந்தமையால் வைத்தியசாலையில் இருந்து வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், போதியளவு பால் குடிக்காததால் குறித்த சிசுவுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல பெற்றோர் முயற்சித்தனர்.

தந்தை ஓட்டோவை வாடகைக்கு பிடிப்பதற்காக தேடிய போதிலும், எரிபொருள் பற்றாக்குறையால் ஓட்டோவைப் பிடிப்பதில் சிரமம் ஏற்பட்டது.

இதன் காரணமாக குழந்தை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக தாமதமாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தந்தை விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

இதேவேளை, முன்னதாகவே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தால் குழந்தையை காப்பாற்றியிருக்கலாம்என்றுதந்தையிடம்வைத்தியர்கள்கூறியுள்ளனர்.

# கனேடிய நாடாளுமன்றில் நிறைவேற்றிய பிரேரணையிலுள்ள தவறுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜீ.எல். பீரிஸ் வலியுறுத்தல்

கனேடிய நாடாளுமன்றத்தில் நினைவேற்றப்பட்ட மே 18 ஆம் திகதியை தமிழினப்படுகொலை நினைவு நாளாகப் பிரகடனப்படுத்தும் பிரேரணையிலுள்ள தவறுகளை சரி செய்வதற்கு கனடா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்காக கனடாவின் பதில் உயர்ஸ்தானிகர் அமெண்டா ஸ்ட்ரோஹானுடனான சந்திப்பின் போதே வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கனேடிய நாடாளுமன்றத்தில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாக்க கூறப்படும் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்காக இலங்கை அரசாங்கத்தின் உறுதியான எதிர்ப்பையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேற்படி பிரேரணையின் அப்பட்டமான பொய்யான உள்ளடக்கத்தை திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றதாகக் கண்டறியப்படவில்லை.

சட்ட அர்த்தங்களைக் கொண்ட இத்தகைய தொழில்நுட்ப சொற்களை எச்சரிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இந்த பிரேரணையின் தவறான மற்றும் பாரபட்சமான தன்மை, இதன் விளைவாக பொது களத்தில் உருவாகியுள்ள இலங்கை மீதான எதிர்மறையான கருத்துக்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, பிரேரணையிலுள்ள தவறுகளைச் சரி செய்வதற்கு கனடா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைக்கும் கனடாவுக்குமிடையில் 6 தசாப்தத்துக்கும் மேலாக நீடித்து வரும் வலுவான இருதரப்பு உறவுகளின் பின்னணியில் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம் என்று பதில் உயர் ஸ்தானிகரிடம் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.



இதன் போது அமைச்சரின் கோரிக்கைக்கு பதிலளித்த கனேடிய பதில் உயர்ஸ்தானிகர், கனடாவின் நாடாளுமன்ற பொதுச்சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தனிப்பட்ட உறுப்பினர்களின் பிரேரணையின் கட்டுப்பாடற்ற சட்டமியற்றும் தன்மையைக் குறிப்பிட்டார்.

தகுந்த நடவடிக்கைக்காக அரசியல் முன்முயற்சியின் உள்ளடக்கத்தை கனடாவின் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி திணைக்களத்துக்கு தெரிவிக்கவும் அவர் இணக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் நாட்டு இரத்த உறவுகளுக்கு இலங்கை மக்கள் சார்பாக நன்றி!

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைத்திருந்தார்கள். இந்த செயற்பாட்டுக்காக தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கனேடியநாட்டின் நாடாளுமன்றத்தில் எங்களுடைய மே 18 நாளை இனப்படுகொலை நாளாக அந்த வாரத்தை அனுஷ்டிப்பதற்கு கனேடிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்காக பாடுபட்ட ஹரி ஆனந்தசங்கரிக்கு நன்றி. அவர் இந்த விடயத்தில் பாரிய முனைப்பு காட்டியது இட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த செயல்பாடு எங்களுடைய நாட்டிலும் பிரதேச சபை, நகர சபை போன்ற இடங்களில் இந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை பிரதான கோரிக்கையாக நான் முன்வைக்கிறேன்.

அதேபோல் கனேடிய நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அந்த நாட்டுமக்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

அத்துடன் தமிழ்நாட்டு உறவுகள் இலங்கை மக்களுக்கு மிக உற்சாகமான முறையில் தங்களுடைய உறவுகள் பட்டினி கிடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு அரிசி, பால் மா ,மருந்து பொருள்கள் அனுப்பி வைத்திருந்தார்கள்.

இந்த செயற்பாட்டுக்காக தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர் தமிழ்நாட்டின் சட்டசபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் தமிழ்நாட்டில் ஒரு சிறுமி தனக்கு சைக்கிள் வாங்குவதற்காக சேமித்து வைத்திருந்த பணத்தை இலங்கை மக்களுக்காக வழங்கியிருந்தார். அதேபோல் தேநீர் கடை நடத்தும் ஒரு நபர் தான் வழங்கும் தேநீரை கொடுத்து தேநீரை பெற்றுக் கொள்பவர் தங்களால் முடிந்த அளவு இலங்கை மக்களுக்கு வழங்கும் பணத்தை இலங்கை மக்களுக்கு அனுப்ப உள்ளார்.

அதேபோல் அன்றாடம் யாசகம் பெறும் ஒரு முதியவர் கூட தன்னுடைய பணத்தை எங்களுடைய மக்களுக்கு வழங்குவதற்கு முன் வந்திருந்தார். இதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஆன தொப்புள் கொடி உறவு என்பது.

அதைத்தான்தான் ஆடாவிட்டாலும்தன்தசையாடும் என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே தமிழ்நாட்டு மக்களும் இலங்கை தமிழ் மக்களும் ஏற்படும் சிறுசிறு முரண்பாடுகளை பெரிதாக்காமல் எங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய ஒரு வேண்டுகோளாக இருக்கின்றது.

அதேபோல் அகதி முகாம்களில் இருக்கும் எங்களுடைய மக்களை இன்றும் தமிழ்நாட்டு மக்கள் பாதுகாத்துக் கொண்டிருக்கும் அந்த செயற்பாடுகளையும் எங்களால் ஒருபோதும் மறக்க முடியாது. அந்த வகையில் தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் அனைத்து தமிழக மக்களுக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சார்பாகவும் எனது கட்சி சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எங்களுடைய வன்னி மாவட்டத்தில் குறிப்பாக கடல் தொழிலாளர்கள் விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருள் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கிறது. மண்ணெண்ணெய் இல்லாத சூழலில் அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது. அவற்றை சீர் செய்யுமாறு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறோம். முதன்மை அடிப்படையில் எங்களுடைய விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் மண்ணெண்ணெய் டீசல் வழங்க வேண்டும் என்று பேசியிருந்தோம்.

இப்போது இருக்கும் அமைச்சர் அவர்கள் விரைவாக



சீர் செய்வதாக கூறிய போதும் அவை சரியான முறையில் சீர் செய்யப்படவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு.

இன்றைக்கும் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்துக் கொண்டு இருப்பதை காண முடிகிறது. அந்த வகையில் எங்களுடைய மீனவர்கள் விவசாயிகளின் உழைப்பு வருமானம் பாதிக்கப்படும் ஒரு செயல்பாடாக இவை இருக்கின்றது.

ஆகவே அரசாங்கம் பெற்றோல் டீசலுக்கு காட்டுகின்ற முனைப்பை போலவே மண்ணெண்ணெய்க்கும் துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

அரசாங்கம் சொல்கிறது காஸ், பெற்றோல், டீசல் இனிமேல் தாராளமாகக் கிடைக்கும் என்று.

ஆனால் இப்பொழுதும் மக்கள் இரவிரவாக வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த விடயத்தில் உடனடியாக கவனம் செலுத்தி இந்த மக்களுடைய பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தை கேட்டு நிற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பயிர் செய்கைகளுக்கான விதைகளுக்கும் தட்டுப்பாடு

10 ஆயிரம் பேருக்கு பசளைகளை வழங்காது போனால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து 300 ரூபா முதல் 400 ரூபாவுக்கு விற்பனை செய்ய நேரிடும் என கமத்தொழில், பசளை மற்றும் பெருந்தோட்டத்துறை சம்பந்தமாக காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களை கண்டறிய பிரதமர் நியமித்த குழுவின் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற குழுவின் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். இந்தியாவின் கடன் யோசனை முறையின் கீழ் இலங்கைக்கு 65 ஆயிரம் மொற்றி தொன் யூரியாவை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 40 ஆயிரம் மெற்றி தொன் நெல் பயிர் செய்கைக்கும், 20 ஆயிரம் மெற்றி தொன் சேனை பயிர் செய்கைக்கும் வழங்க எதிர்பார்த்துள்ளோம் எனவும் அகிலவிராஜ் கூறியுள்ளார்.

அதேவேளை நாட்டில் தற்போது நிலவும் அந்நிய செலாவணி பிரச்சினை காரணமாக, நெல், காய்கறி, பெரிய வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்களுக்கான விதைகள் போதுமான அளவில் இல்லை.

விதைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை கமத்தொழில் துறையில் மிக முக்கியமான பிரச்சினையாக மாறியுள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அரசின் ஆதரவு இல்லாவிட்டால் இலங்கை போன்று ஏனைய நாடுகளிலும் போராட்டங்கள் வெடிக்கலாம்

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

அரசாங்கத்தின் முறையான ஆதரவு இல்லாவிட்டால், ஏனைய நாடுகளில் இலங்கை பாணியில் போராட்டங்கள் வெடிக்கலாம் என சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது.

சமூகத்தின் ஏழ்மையான மக்களுக்கு உணவு மற்றும் எரிசக்தி செலவை அரசாங்கங்கள் மானியமாக வழங்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாதெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றிக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இரண்டு முன்னுரிமைகள் உள்ளன, ஒன்று மிகவும் ஏழ்மையான மக்கள், சமூகத்தின் பிரிவுகள் இப்போது அதிக உணவு மற்றும் எரிசக்தி விலைகளுடன் போராடுகின்றனர். இரண்டாவதாக, உக்ரைனில் நடந்த போரால் மிகவும் சேதமடைந்த வணிகங்களை ஆதரிப்பது,' என்று ஜார்ஜீவா சுட்டிக்காட்டியுள்ளார்.

தொற்றுநோய்க்கு எதிராக தாங்கள் பெற்ற பெரும் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய அரசாங்கங்களின் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாகவும் ஜார்ஜீவா கவலை வெளியிட்டுள்ளார்.

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி எதிர்க்கட்சித் தலைவருடன் நேற்று பேச்சு

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி அலகா சிங், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கையின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு முன்னெப்போதையும் விட வலுவான ஆதரவை வழங்குமாறு இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துப்பொருள்களின் தட்டுப்பாடு தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இந்நிலைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியால் செயற்படுத்தப்பட்டுவரும் ‘எதிர்க்கட்சியின் மூச்சு’ வேலைத்திட்டம் மூலம் 50 இக்கும் மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு உபகரணங்களை நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரால் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டை உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பாராட்டினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலைக் கைதிகள் 15 பேர் சாதாரண பரீட்சைக்கு தோற்றினர்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில், தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பைச்சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் 04 பேர் உள்ளிட்ட பதினைந்து சிறைக் கைதிகள் இம்முறை தோற்றியுள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் ஒரு கைதியும், மகசீன் சிறைச்சாலையில் நான்கு புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களும், வட்டரெக்க திறந்த சிறைச்சாலையில் 10 சிறுவர் குற்றவாளிகளும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

வட்டரக்க மற்றும் மகசீன் சிறைச்சாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவற்றில் கைதிகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று ஆரம்பமான பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 3 ஆயிரத்து 844 பரீட்சை நிலையங்களில் 5 லட்சத்து 17 ஆயிரத்து 496 பரீட்சாத்திகள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# புலம்பெயர் மக்களின் எதிரொலியும் தாக்கமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் -19

ரணிலை – அவரது அரசியல் டீல்களை – விளங்கிக்கொள்வது தமிழ் மக்களது அனுசரணைக்கு மிக அவசியம்.

தன்னுடைய பாரம்பரிய கட்சியான ஐக்கிய தேசிய கட்சியை தன் சுய நலன்களுக்காகப் பிடிவாதம் பிடித்து, பிரித்து, நாசமாக்கி, கடந்த தேர்தலில் மாவட்ட ரீதியில் ஓர் ஆசனம் கூடக் கிடைக்காத நிலையில் தோல்வியடைய வைத்து, தேசிய ரீதியில் கிடைத்த ஓர் ஆசனத்தையும் தானே எடுத்துக் கொண்டவர் ரணில்.

அவரது பிரயாசை, ஓர் அடி வைக்க இடம் கேட்டு, பின்னர் அரக்கனின் தலை மேல் மூன்றாம் அடியாகப் பாதத்தையே வைத்த ஓரடி அளந்த பெருமான் கதையாகத்தான் இருக்கும்.

அவர் சுவீகரித்த நாடாளுமன்ற அங்கத்தினர்கள் ராஜபக்ஷகளின் குட்டைகளில் ஊறிய மட்டைகள்தான். அவரையே பாதுகாப்பது இந்த அங்கத்தினர்களுக்கு வசதியானது. அவர்களைப் பகைக்க ரணிலும் விரும்பமாட்டார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்தால் ரணில் என்ன, தற்பொழுது இருக்கும் நாடாளுமன்றத்தின் அங்கத்தினர் யாவருமே பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் மீள வருவது சந்தேகத்துக்குரியது.

இந்தப் பின்புலத்தில்தான் ரணில் கதையளக்கின்றார்.

மக்களுக்கு உண்மையானவர் போலக் காட்டி, நாட்டின் தற்போதைய நிலையை முழுமையாக அறிவித்து, இதிலிருந்து பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும், அதற்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கும், 2024 வரை தேர்தல் நடைபெறக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என ஜனாதிபதியுடன் சேர்ந்து மிகத் திடமாக அறிவித்து விட்டார் ரணில்.

நாடு சுமுகமான நிலைக்கு திரும்புவதாக ஒரு ஒரு பிரமையை ஏற்படுத்தி, வெகு விரைவில் எல்லாம் நலம் பெறும் எனச் சொல்லிகக் கொண்டு, ராஜபக்ஷகளின் அடிவருடிகள் அமைச்சுப் பதவிகளில் அமர்ந்து ஆட்சியைத் தொடர்ந்துமுன்னெடுக்கப்போகிறார்கள்.

முறைகேடுகளுக்கு பெயர்போன பிரசன்ன ரணதுங்க அமைச்சராகி, ஏற்கனவே வீடுகள் எரிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை மீளமைக்க நிதி முன்னிலைப்படுத்தி தரப்படும் என அறிவிக்கிறார். பொதுமக்கள் பலர் அரச காடையர்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அரச தரப்பினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டவர்களே முக்கியமாகக் கைது செய்யப்படுகிறார்கள். வன்முறையைத் தூண்டியவர்கள் என மின்னஞ்சல் பதிவுகள் செய்த பல 'கோட்டா கோ ஹோம்' ஆதரவாளர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆக, முதற்படியாகக் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் உடனடியான கோரிக்கையான ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதை இழுத்தடிப்பதும், அரசாங்கமும் நாடாளுமன்றமும் முற்றாக பதவிகளை விட்டு விலகி புதிய தேர்தலுக்கு வழிவகுக்க வேண்டும் என்ற கோரிக்கையை மழுங்கடிப்பதும் ரணிலின் நோக்கம்.

உள்ளிருந்து நம்பிக்கை தந்து, அடுத்துக் கெடுப்பதில் ரணில் சூரர். விடுதலைப் புலிகளில் பிரபாகரனுக்கும் பொட்டு அம்மானுக்கும் விரிசல்கள் தொடங்குகின்றன என்பதை ஒட்டி செய்திகள் கிடைத்தபோது, அவற்றைப் பயன்படுத்தி கருணாவை முற்றாக பிரித்து எடுத்தது தனது திட்டம்தான் எனத் தம்பட்டம் அடிப்பவர் ரணில். அந்தப் பிரிவினையைப் பாவித்துத் தான் ராஜபக்ஷக்கள் முன்னேறினார்கள் என்பது ரணில் கூசாமல் முன்வைக்கும் செய்தி.

ஊடகங்களின் அனுமானங்களின் படி, ரணிலை மஹிந்த கொண்டு வந்தமை, முதலாவது – சர்வதேச மனித உரிமை மன்றின் விசாரணைகளில் தங்களுக்கு வரக்கூடிய குற்றச்சாட்டுக்களில்இருந்துதங்களைபாதுகாப்பதற்கு; இரண்டாவது – நாடு எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு.

இவை தொடர்பான பேச்சுக்களில் முன்னேற்றம் இருந்தபோதே 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் தொடங்கி மஹிந்த பதவி விலகினார். மஹிந்தவின் கனவான நாமலின் எதிர்காலத்தையும் அது கேள்விக்குறியாக்கி உள்ளது.

ஆகவே ராஜபக்ஷக்களுக்கு – முக்கியமாக கோட்டாவுக்கு – சர்வதேச அரசியல் ஊடாக ஒரு பாதுகாப்பான பாதையை சமைப்பதும், அப்படியான ஒன்று ஆக்கப்பட்டதும் ரணில் கோட்டாவைப் பதவி விலகக் கோருவார் என்ற அனுமானமும் தீர்மானகரமாகப் பேசப்படுகிறது. மாலைதீவின் ஜனாதிபதிக்கு எதிராகப் புரட்சிகள் நடந்து, அவர் சர்வதேசத்தின் கெடுபிடிகளுக்கு ஆளான போது, அவருக்கு மஹிந்தவின் அரசு ஆதரவு கொடுத்தது. அதற்குப் பிரதியுபகாரமாக மாலைதீவின் அந்த முன்னாள் ஜனாதிபதியின் தலைமையில் ஒரு குழுவை இலங்கைக்காக சர்வதேசத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்துமாறு ரணில் கேட்டுள்ளார்.

அவை முன்னேற அவர்களுக்கு அப்படியான ஒரு நாட்டில் பாதுகாப்பும் சுதந்திரமான வாழ்வும் கிட்டும் சூழல் ஏற்படும். அப்பொழுது – அனேகமாக 6 மாதங்களில் – கோட்டாவைப் பதவி விலகக் கோரி, அதையடுத்து ரணில் பிரதமர் பதவியை விட்டு விலகி, தாம்

☞12

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
**BAR ASSOCIATION OF SRI LANKA**

23rd May 2022

Hon. Dr. Wijeyadasa Rajapakshe MP,
Minister of Justice, Prison Affairs and Constitutional Reforms,
Ministry of Justice - Sri Lanka,
Superior Courts Complex,
Colombo 12.

Dear Sir,

**THE 21ST AMENDMENT TO THE CONSTITUTION**

The Bar Association of Sri Lanka (BASL) has perused the draft 21st Amendment to the Constitution which is to be presented by the Honourable Minister of Justice to the Cabinet of Ministers shortly.

On the 23rd of April 2022, the Bar Council approved the "PROPOSALS OF THE BAR ASSOCIATION OF SRI LANKA (BASL) TO RESTORE POLITICAL AND ECONOMIC STABLITY IN THE COUNTRY". In the 13-point proposal the BASL proposed the introduction of the 21st Amendment to the Constitution by repealing the provisions of the 20th Amendment and restoring the 19th Amendment, and the re-establishment of the Constitutional Council and the Independent Commissions which existed under the 19th Amendment whilst enhancing their financial independence, transparency, and accountability.

**The BASL is concerned that the whilst the 21st Amendment will restore the provisions of the previous 19th Amendment to the Constitution as regards the Constitutional Council and the Independent Commissions, there are several vital provisions which were found in the 19th Amendment which are not incorporated into the draft 21st Amendment.**

The provisions of the 19th Amendment precluded the President from assigning to himself any subjects or functions. However, the 21st Amendment does not incorporate such a provision and as such the President will be able to continue to retain Ministries and assign to himself any subjects and functions and take over subjects and functions of any Minister. The BASL is of the view that the 21st Amendment must include a provision amending Article 44(2) of the Constitution removing the power of the President to retain Ministries and assigning to himself any subjects or functions. Such provision must be made operative as soon as the 21st Amendment is passed.

In addition, the BASL observes that the President's powers to prorogue and dissolve Parliament are left intact, in contrast to the 19th Amendment to the Constitution where the President could dissolve Parliament only after four and a half years following a Parliamentary election. The BASL is of the view that the provisions in the 19th Amendment relating to dissolution of Parliament should be restored.

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
**BAR ASSOCIATION OF SRI LANKA**

In addition, the BASL recommends that the following matters which were contained in the BASL proposals be included in the 21st Amendment:

1. A provision for the members of the Monetary Board to be appointed with the approval of the Constitutional Council (in addition to the Governor of the Central Bank);
2. A provision for the appointments of the Secretaries to the Ministries, Governors of the Provinces, Ambassadors and Heads of Missions be done on the advice of the Prime Minister in consultation with the Cabinet of Ministers;
3. A provision to require Presidential Pardons to be done according to the recommendation by a body established by law, appointed by the President on the recommendation of the Constitutional Council;
4. A provision to enhance the financial independence, transparency, and accountability of the Independent Commissions.

The BASL further recommends that the number of members of the Constitutional Council who are not Members of Parliament be increased from 3 to 5 and conversely the number of Members of Parliament on the Constitutional Council be reduced from 7 to 5 as was found in the 17th Amendment to the Constitution. This is consistent with the position taken by the BASL in 2015 when the 19th Amendment was enacted.

The BASL calls on the Government to ensure the early enactment of the 21st Amendment to the Constitution, as it is a necessary step towards achieving stability in Sri Lanka.

Thank you.

Yours faithfully.

**Saliya Pieris PC**
**President**
**Bar Association of Sri Lanka**

**Isuru Balapatabendi**
**Secretary**
**Bar Association of Sri Lanka**

காலைக்கதிர் Kalaikkathir

## புலம்பெயர்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதி ஆவார். அவர் ஜனாதிபதி ஆனதும் நிறைவேற்று அதிகாரம் உள்ளவராக நாமலைப் பிரதமர் பதவிக்கு அழைப்பார். அதற்கு தற்சமயம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும். அடுத்த தேர்தல் வரை இந்த அரசாங்கம் ஓடும்.

இதனையொட்டி இரண்டு விடயங்கள் பற்றி நீங்கள் கேட்பது தெரிகிறது.

விஜயதாச ராஜபக்ஷ ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்த அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருக்கும் பிரேரணையைப் பலரும் எதிர்பார்க்கிறார்கள். அது என்னவாகும் என்பது ஒன்று.

இதுவும் தான் உறுதியளித்தவற்றை நிறைவேற்றக் காரியங்கள் செய்கிறேன் என்ற படத்தை காட்டுவதற்கான பம்மாத்து நடிப்புத்தான். இது தயாரிக்கப்பட்டு (மஹிந்தவே அதைப்பற்றி சுமந்திரனிடம் அறிவுரை கேட்டமை நினைவிருக்கலாம்) அமைச்சரவை ஒப்புதலுக்காக வைக்கப்பட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிலிருந்த ஒரேயொரு முக்கிய விடயம் இரட்டைப் பிரஜாவுரிமை இருப்பவர்கள் நாடாளுமன்ற அங்கத்தினராக, அமைச்சராக இருக்க முடியாது என்பதாகும்.

இப்போது சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் 21 ஆவது அரசமைப்புத் திருத்தம், முன்னைய 19 ஆவது திருத்தத்தில் இருக்கும் பல விடயங்களைக் கொண்டிருக்கவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விவரமாகச் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

அதாவது, ஜனாதிபதியின் அதிகாரங்களை வெட்டி குறைப்பது தொடர்பாக 19 ஆவது திருத்தத்தில் இருந்த பல விடயங்கள் இப்போது புதிதாக நேற்று அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச 21 ஆவது திருத்தத்தில் இல்லை.

அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி தம் விருப்பப்படி தேர்வு செய்து தன்னுடன் வைத்திருக்கலாம் என்ற நிலைமை தொடரப் போகின்றது. உயர் பதவிகளுக்கு உரியவர்களை சுயாதீன ஆணைக்குழு மூலம் நியமிக்க வேண்டும் என்ற 19 ஆவது திருத்த ஏற்பாடுகள் இந்த உத்தேச 21 ஆவது திருத்த ஏற்பாடுகளில் தெளிவாக இல்லை. நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலக்கும் ஜனாதிபதியின் அதிகாரம் வெட்டப்படவில்லை. 19 ஆவது திருத்தத்தின் கீழ் அரசமைப்பு கவுன்ஸில் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் பெற்ற பல அதிகாரங்களை 20 ஆவது திருத்தம் மூலம் பறித்து, மீண்டும் ஜனாதிபதி சுவீகரித்திருந்தார். அவற்றை இந்த 21 ஆவது திருத்த வரைவு திருத்தி அமைப்பதாக இல்லை. அந்த அதிகாரங்கள் தொடர்ந்து ஜனாதிபதியிடமே இருக்கக் கூடியதாக 21 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுருக்கின்றது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிகாட்டி இருக்கின்றது.

அமைச்சுக்களின் செயலாளர்களை நியமனம் செய்தல், மாகாண ஆளுநர்களை நியமித்தல், தூதுவர்கள் மற்றும் தூதரகத் தலைவர்களை நியமித்தல் போன்றவற்றை அமைச்சரவையினதும், பிரதமரினதும் கலந்தாலோசனையுடன் தான் ஜனாதிபதி செய்யவேண்டுமென்று ஏற்பாடு 21 ஆவது திருத்தத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்று சட்டத்தரணிகள் சங்கம் கேட்டிருக்கின்றது. அதேபோல, பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரத்தையும் கட்டுப்படுத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது.

இவையெல்லாம் இல்லாமலேயே 21 ஆவது திருத்தத்தை அவசர அவசரமாக ஆளும் தரப்பு ஒரு கண்துடைப்பு விளையாட்டாகக் கொண்டு வந்திருக்கின்றது.

மக்கள் ஜனாதிபதியை வீட்டுக்குப் போ என்று போராடுகிறார்கள். இப்போதைக்கு ஜனாதிபதியின் அதிகாரத்தை ஓரளவுக்கு வெட்டிக் குறைக்கிறோம், பொறுத்துக் கொள்ளுங்கள் என்ற மாதிரி சில சமரச ஏற்பாடுகளை ஆளும் தரப்பு செய்ய முனைகிறது. அவை ஜனாதிபதிக்கு எதிராகச் சீற்றம் கொண்டிருக்கும் பொதுமக்களைச் சமாளிக்கப் போதுமானவையா என்பது முதல் கேள்வி. அப்படி வெட்டிக் குறைப்பதாகக் கூறப்பட்ட அதிகாரங்களின் விடயத்திலும் வெளிப்பூச்சு நாடகங்களே அரங்கேறுகின்றன. உண்மையில் அதிகாரங்கள் வெட்டி குறைக்கப்படவில்லை என்றால் அது மக்களின் சீற்றத்தைத் தணிக்க மாட்டாது. அது மாத்திரமல்ல, இது விடயத்தில் நாடகமாட அரசு முயல்கின்றது என்பது மக்களின் கோபத்தை இன்னமும் அதிகரிக்கவே செய்யும்.

போகின்ற போக்கில் பார்த்தால் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் இந்த நடவடிக்கை கூட நாடாளுமன்றத்திற்கு வந்து, நடைமுறைக்கு வர பல மாதங்கள் ஆகலாம். இது, ரணிலுக்கு ராஜபக்ஷக்களை ஒட்டிப் பாதுகாப்பான பாதையை ஏற்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்குவதாக இருக்கலாம்.

இவையெல்லாம் ராஜபக்ஷ – ரணில் கூட்டின் தந்திரோபாயங்களேயொழிய நேர்மையான நடவடிக்கைகள் அல்ல.

நாடாளுமன்றம் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வரை 21 ஆவது திருத்தம் கூட உண்மையான – நேர்மையான – போக்கில் நிறைவேற்றப்படுவது கடினம். அது இயலாமல் போகும்போது ரணில் கையை விரிப்பார். அல்லது தன்னை கோட்டா போன்று பார்க்கக் கூடாது என்று கூறிச் சமாளிக்க முயல்வார்.

(வளரும்)

## 21ஆவது திருத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வரைவில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியமான ஏற்பாடுகள் உள்ளடக்கப்படவில்லை என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வரைவு தொடர்பில் கவலையும் அதிருப்தியும் தெரிவித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நீதி அமைச்சரால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான வரைவை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆராய்ந்துள்ளது.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகளுக்கு கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி சட்டத்தரணிகள் கவுன்ஸில் ஒப்புதல் அளித்திருந்தது.

20ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை நீக்கி 19ஆவது திருத்தத்தை மீளக் கொண்டுவருவதன் மூலமும் 19ஆவது திருத்தத்தின் கீழ் இருந்த அரசமைப்புப் பேரவை மற்றும் சுயாதீன ஆணைக் குழுக்களை மீண்டும் நிறுவுவதற்கும், அதே வேளை நிதிச் சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கும் அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவதற்கு 13 விடயங்களை உள்ளடக்கிய முன்மொழிவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்மொழிந்தது.

அரசமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பாக அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் 21ஆவது திருத்தம் மூலம் மீளக் கொண்டுவரப்படும் என்று சட்டத்தரணிகள் சங்கம் கருதியது. ஆனால் இது தொடர்பாக 19 ஆவது திருத்தத்தில் உள்ள முக்கிய ஏற்பாடுகள் 21ஆவது திருத்த வரைவில் உள்ளடக்கப்படவில்லை.

19 ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகள் ஜனாதிபதி தனக்கு எந்தவொரு அமைச்சுக்கான விடயதானங்களையும் செயற்பாடுகளையும் ஒதுக்குவதைத் தடுக்கிறது. ஆனால் 21 ஆவது திருத்தம் அத்தகைய தடுப்பு ஏற்பாடுகளை உள்ளடக்கவில்லை. எனவே ஜனாதிபதி தொடர்ந்தும் அமைச்சுக்களைத் தக்க வைத்துக் கொள்ளவும், எந்தவொரு விடயதானங்களையும் செயற்பாடுகளையும் தனக்கு ஒதுக்கிக் கொள்ளவும், எந்தவொரு அமைச்சரின் விடயதானங்களையும் செயற்பாடுகளையும் எடுத்துக் கொள்ளவும் முடியும். 21ஆவது திருத்தம் அரசமைப்பின் சரத்து 44(2)ஐத் திருத்தும் விதியை உள்ளடக்கியிருக்க வேண்டும். 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் ஜனாதிபதி அமைச்சுக்களைத் தக்க வைத்துக் கொள்ளும் மற்றும் எந்தவொரு விடயங்கள் அல்லது செயற்பாடுகளையும் தனக்கே ஒதுக்கும் அதிகாரத்தை நீக்கி அத்தகைய ஏற்பாடு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான 19ஆவது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகள் மீளமைக்கப்பட வேண்டும்.

மேலும் சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்மொழிவுகளில் உள்ள பின்வரும் விடயங்களை 21 ஆவது திருத்தத்தில் சேர்க்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் பரிந்துரைக்கின்றது.

1. நாணயச் சபையின் உறுப்பினர்கள் அரசமைப்புப் பேரவையின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட வேண்டும.

2. அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண ஆளுநர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் தூதரகத் தலைவர்கள் போன்றோர் அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து பிரதமரின் ஆலோசனையுடன் நியமிக்கப்பட வேண்டும்.

3. அரசமைப்புச் சபையின் பரிந்துரைக்கமைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சட்ட ரீதியான ஒரு அமைப்பு மூலம் ஜனாதிபதியின் பொது மன்னிப்புக்கள் சிபார்சு செய்யப்பட வேண்டும்.

4. நிதி சுதந்திரம், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள்.

17ஆவது திருத்தத்தில் காணப்பட்டவாறு அரசமைப்புச் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்களல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3 இல் இருந்து 5 ஆக அதிகரிக்கவும், மாறாக அரசமைப்புச் சபையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 7 இல் இருந்து 5 ஆக குறைக்கவும், சட்டத்தரணிகள் சங்கம் பரிந்துரைக்கிறது. இது 2015 இல் 19ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட்டபோது சட்டத்தரணிகள் சங்கம் எடுத்த நிலைப்பாட்டுடன் ஒத்துப்போகிறது.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் இலங்கையில் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு அவசியமான ஒரு படியாக இருப்பதால் அதை முன்கூட்டியே நிறைவேற்றுவதை உறுதி செய்யுமாறு சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றது. – என்றுள்ளது.

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

தெற்கின் அரசியல் நகர்வுகளில் கருத்து தெரிவிப்பதில் நேரத்தை வீணடிப்பதை தவிர்ப்பதே சிறந்தது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான 21ஆவது திருத்த சட்ட மூல பரிந்துரைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஒருவரிடத்தில் அனைத்து அதிகாரங்களும் குவிந்து இருப்பதை எதிர்த்து தமிழ்த் தேசியத் தரப்புகள் ஒருமித்த அறிக்கை ஒன்றையும் அண்மையில் வெளியிட்டிருந்தோம். ஜனாதிபதியின் எதேச்சாதிகாரப் போக்கை இல்லாதொழிக்க இது உதவும். நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்திற்கு வழங்குவது ஜனநாயகத்தை உறுதி செய்யும்.

ஆனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அல்லது நாடாளுமன்றம் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வினை கடந்த காலங்களில் வழங்கத் தவறியுள்ளன. இந்த திருத்தங்கள் ஊடாகத் தமிழ் மக்களுக்கு உறுதியாகப் பெற்றுத் தரக்கூடிய அதிகார விடயங்களை தமிழ் அரசியல் தரப்பினர் கையாள முன்வர வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் 21 ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதோடு ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கக் கூடிய அதிகாரப் பகிர்வினை நிரந்தரமாகவும் மீளப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கும் வழி செய்ய வேண்டும். ஏற்கனவே அரசியல் யாப்பில் கூறப்பட்ட அதிகாரங்களை வலுப்படுத்தி, மீள் நிறுத்தி முற்றாகப் பகிர்வதற்கு முன்மொழியப்பட இருக்கும் 21 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ்த் தரப்புக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

புதிய அரசியல் யாப்பின் மூலமே இதைச் செய்யமுடியும், மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற பலசாக்கு போக்கினை ஆளும் தரப்பினர் சொல்ல முற்படுவார்கள். ஆனால் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்துவதற்கு புதிய அரசியல் யாப்பு அல்லது மக்கள் வாக்கெடுப்பு அவசியமில்லை. திருத்தங்களின் மூலமே அவற்றை செய்து கொள்ள முடியும்.

அரசியல் யாப்பில் இல்லாத நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்குவதற்கு 20 ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய போது மக்கள் வாக்கெடுப்பு தேவைப் படவில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அல்லது அதிகாரங்களை வலுப் படுத்துவதற்கு மக்கள் வாக்கெடுப்பு தேவை எனக் கூறி தப்பித்துக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்?

புதிய அரசியல் யாப்பு, பொதுஜன வாக்கெடுப்பு என்பன நாம் கோருகின்ற நிரந்தரமான சமஷ்டி முறையான அரசியல் தீர்வை வழங்குவதற்கே அவசியம் என்பதை தமிழர் தரப்பு வலியுறுத்த வேண்டும்.

தெற்கிலே ஏற்பட்டிருக்கும் அரசியல் சூழ்நிலைகளில் ஆர்வத்தோடு தினமும் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்து வருவது தமிழ் மக்களுக்கு நலன் பயக்காது. அங்கு ஆக்ரோத்தோடு எதிர்ப்பு கருத்து தெரிவிப்பதும் பிரேரணைகளை முன்வைப்பதும் அவர்களோடு கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும் ஒருபுறம் இருக்க கொண்டு வரப்பட இருக்கும் 21 ஆம் திருத்தத்தில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள அதிகாரங்களை முற்றாக பகிர வலியுறுத்த நாம் முயல்வது ஆக்கபூர்வமானதாக அமையும்.

ஏற்கனவே அரசியல் யாப்பில் அதிகாரங்கள் பல வழங்கப் பட்டு உள்ளன. அவை நிரந்தரமாக்கப் படவும் இல்லை. பகிரப் படவும் இல்லை. முற்றாக நடைமுறைப் படுத்தப் படவும் இல்லை. இன்னொரு வகையில் கூறுவதாக இருந்தால் அரசியல் யாப்பில் உள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்துவதில் பாரிய இடைவெளியை காண்கிறோம். ஜனாதிபதி முறைமையில் அரசியல் யாப்பில் சொல்லப்பட்ட விடயங்களை அரசாங்கம் முற்றுமுழுதாக நடைமுறைப் படுத்துகிறது. ஆனால் அதிகாரப் பகிர்வு என்று வருகின்ற பொழுது இருப்பதையே நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் பின்நிற்கின்றது.

ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ளவற்றுக்கும் நடைமுறைப் படுத்துவதற்குமான இடைவெளியை சீராக்கி முற்றாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதை கையாள்வது எமது கடமை. ஏனெனில் எதிர்காலத்தில் சமஷ்டி முறையான தீர்வு அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்டாலும் அது நடைமுறைப் படுத்துதில் பாரிய சிக்கல்களை நாங்கள் எதிர்கொள்ள நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில், சிறப்பாக ஒருமித்து நின்று கையாள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தயவுடன் அழைக்கின்றோம்.– என்று உள்ளது.

## 21ஆம் திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

21ஆவது திருத்தம் தற்போதுள்ள ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துவதற்கும் அவற்றை சுயாதீனமாக்குவதற்கும் உதவும்.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் நாடாளுமன்றத்தில் இருப்பதற்கு தகுதி நீக்கம் செய்யப்படுவார்கள் என அந்த சிரேஷ்ட அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.